RCoA
Royal College of Anaesthetists

Trusted Information Creator
Patient Information Forum

சுலபம் படி

மயக்க மருந்துடன் ஒரு அறுவை சிகிச்சை செய்தல் எளிதாக படிக்கும் சிறு புத்தகம்

எளிதாக படிக்கும் சிறு புத்தகம்படிசுலபம்

அறுவைசிகிச்சை செய்வது பயமாகத் தோன்றலாம், ஆனால் கவலைப்படாமல் இருக்க நீங்கள் செய்யக்கூடிய விஷயங்கள் உள்ளன.

இந்த சிறு புத்தகம் உங்களுக்கு கடினமாக இருக்கும் சில வார்த்தைகளை விளக்குகிறது.

என்ன எதிர்பார்க்க வேண்டும், எப்படி அறுவை சிகிச்சைக்கு தயாராக வேண்டும் என்பதையும் இது சொல்கிறது.

உங்களுக்கு உதவிகரமாக இருக்கும் என நம்புகிறோம்.







கடினமான வார்த்தகைள் என்ன அர்த்தம்

மயக்க மருந்து (‘An-ess-thee-zee-a’ போல் தரிகிறது) அறுவை சிகிச்சைக்காக உங்களை தூங்க வைக்கிறது.

பொது மயக்க மருந்துகள் ('An-ess-the-tics' போன்ற ஒலிகள்) மருந்துகள் உங்களை தூங்க அனுப்புகின்றன, எனவே அறுவை சிகிச்சையின் போது நீங்கள் வசதியாக இருப்பீர்கள்.

மூன்-மதிப்பீட்டு கிளினிக் மருத்துவமனையில் உள்ள ஒரு கிளினிக், அங்கு ஒரு சுவிலியர் உங்கள் உடல்நலம் குறித்து உங்களிடம் கேள்விகளைக் கேட்பார். மயக்க மருந்துக்கான திட்டத்தைப் பற்றி விவாதிக்க நீங்கள் ஒரு மயக்க மருந்து நிபுணரையும் சந்திக்கலாம்.

கன்னூலா ('can-you-la' என ஒலிக்கிறது) ஒரு மெல்லிய பிளாஸ்டிக் குழாய், அதை ஒரு மருத்துவர் அல்லது சுவிலியர் உங்களுக்கு மருந்துகள் அல்லது திரவங்களை வழங்க உங்கள் கையின் பின்புறத்தில் வைப்பார்கள்.

மருத்துவமனையில் உங்களை யார் கவனிப்பார்கள்

மருத்துவமனையில் பலரை சந்திப்பீர்கள். அவர்கள் யார், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று நீங்கள் ஆச்சரியப்படலாம்.

மயக்க மருந்து நிபுணர்
('an-ees-th-tist' போல் ஒலிக்கிறது)
அறுவை சிகிச்சையின் போது உங்களை தூங்க வகைக்கும் மருந்துகளை கொடுப்பதில் பயிற்சி பெற்ற மருத்துவர்.

அறுவை சிகிச்சை நிபுணர்
('sir-john' போல் ஒலிக்கிறது)
அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர்.

சவிலியர் -
மருத்துவமனையில் உங்களுக்கும் மருத்துவர்களுக்கும் உதவ எப்போதும் சவிலியர்கள் இருப்பார்கள். உங்களுக்கு ஏதேனும் கவலைகள் இருந்தால் மருத்துவர் அல்லது சவிலியரிடம் பேசலாம்.

மயக்க மருந்து குழு -
அறுவை சிகிச்சைக்கு முன்பும், அறுவை சிகிச்சையின் போதும், பின்பும் உங்களைப் பார்த்துக்கொள்ளும் மருத்துவமனையில் உள்ள மயக்க மருந்து நிபுணர் மற்றும் பிற ஊழியர்கள்.

உங்கள் பராமரிப்பாளர் உங்களுடன் மருத்துவமனைக்கு வரலாம்.



அறுவை சிகிச்சைக்கு எப்படி தயாராக வேண்டும்

அறுவைசிகிச்சைக்கு முன் நீங்கள் ஆரோக்கியமாகவும் நல்ல ஆரோக்கியத்துடனும் இருந்தால், நீங்கள் விரைவாகவும் குறைவான பிரச்சனைகளுடனும் குணமடைவீர்கள்.

நீங்கள் புகைபிடித்தால், மது அருந்தினால் அல்லது சட்டவிரோத மருந்துகளை எடுத்துக் கொண்டால், அறுவை சிகிச்சைக்கு முன் நீங்கள் நிறுத்த வேண்டும் அல்லது குறைக்க முயற்சிக்க வேண்டும். இதற்கான உதவியை எங்கு பெறுவது என்று உங்கள் பொது மருத்துவர் உங்களுக்குச் சொல்ல முடியும்.

நீங்கள் அதிக எடையுடன் இருந்தால், நீங்கள் கொஞ்சம் எடை குறைக்க முயற்சி செய்ய வேண்டும் மற்றும் ஆரோக்கியமான உணவுகளை சாப்பிட வேண்டும். நீங்கள் எங்கு உதவி பெறலாம் என்பதை உங்கள் மருத்துவர் பரிந்துரைக்கலாம்.

நடைபயிற்சி மற்றும் படிக்கட்டுகளைப் பயன்படுத்துவது ஒரு அறுவை சிகிச்சைக்கு உங்களைத் தகுதிபெற உதவும் நல்ல பயிற்சிகள்.

ஆபரேஷனுக்காக மருத்துவமனைக்குச் செல்வதற்கு முன், நீரிழிவு அல்லது ஆஸ்துமா போன்ற உங்களுக்கு ஏதேனும் உடல்நலப் பிரச்சனைகள் இருந்தால் உங்கள் மருத்துவரிடம் பேசுங்கள். நீங்கள் சரியான மருந்துகளை எடுத்துக்கொள்வதை உங்கள் மருத்துவர் உறுதி செய்வார்.

உங்களிடம் தளர்வான பற்கள் இருந்தால், அறுவை சிகிச்சைக்கு முன் அவற்றை சரிசெய்ய உங்கள் பல் மருத்துவரை அணுகவும். அறுவை சிகிச்சையின் போது தளர்வான பற்கள் வெளியே வரலாம்.

அறுவைசிகிச்சைக்குப் பிறகு சாதாரணமாக வெளியே செல்வது கடினமாக இருக்கலாம்.

நீங்கள் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வரும்போது போதுமான உணவு மற்றும் உங்கள் வழக்கமான மருந்துகள் ஏராளமாக இருப்பதை உறுதி செய்ய உங்கள் குடும்பத்தினர், நண்பர்கள் அல்லது பராமரிப்பாளரிடம் கேளுங்கள்.

அறுவை சிகிச்சைக்குப் பிறகு மிகவும் சோர்வாக இருப்பது இயல்பானது. நீங்கள் வீட்டிற்குத் திரும்பும்போது உங்கள் பராமரிப்பாளர்களையும் குடும்பத்தினரையும் சுற்றி இருக்கவும் உங்களுக்கு உதவவும் கேளுங்கள்.

மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்கு முன்

அறுவை சிகிச்சை பற்றி விவாதிக்க மருத்துவமனையின் முன் மதிப்பீட்டு கிளினிக்கில் ஒரு சவிலியர் அல்லது மயக்க மருந்து நிபுணரை சந்திப்பதற்கான தேதி மற்றும் நேரத்தை மருத்துவமனை உங்களுக்கு அனுப்பும்.

உங்கள் பராமரிப்பாளர் அல்லது குடும்ப உறுப்பினர் உங்களுடன் செல்லலாம்.

மருத்துவர் அல்லது சவிலியர் உங்கள் உடல்நலம் மற்றும் நீங்கள் உட்கொள்ளும் மருந்துகளைப் பற்றி உங்களிடம் கேள்விகளைக் கேட்பார்கள். **உங்கள் வழக்கமான மருந்துகள் அனைத்தையும் அவர்களின் பெட்டிகளில் (அல்லது அவற்றின் பட்டியல்) உங்களுடன் சந்திப்பிற்கு கொண்டு வாருங்கள்.**



உங்களுக்கு ஏதேனும் ஒவ்வாமை இருந்தால் அவர்களிடம் சொல்லுங்கள்.

அறுவைசிகிச்சைக்கு முன்பு நீங்கள் சில சோதனைகளைச் செய்து, அது பாதுகாப்பாகச் தொடர முடியும் என்பதை உறுதிப்படுத்தவும் அவர்கள் ஏற்பாடு செய்யலாம்.

அறுவை சிகிச்சைக்கு முன் மக்கள் அடிக்கடி கவலைப்படுகிறார்கள். அறுவை சிகிச்சை அல்லது மயக்க மருந்து பற்றி உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் நீங்களும் உங்கள் பராமரிப்பாளரும் குழுவிடம் கேட்கலாம். அவர்கள் விஷயங்களை விளக்கலாம் மற்றும் உங்களுக்கு உதவி வழங்கலாம்.

அறுவை சிகிச்சை நாளன்று

மருத்துவமனைக்குச் செல்வதற்கு முன் குளிக்கவும் அல்லது தாவாலைக்குழாய் குளிக்கவும். சுத்தமான தோலில் தொற்று ஏற்பட வாய்ப்பு குறைவு.

இவற்றில் எதையும் அணியாதீர்கள் அல்லது மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லாதீர்கள்:

- ✘ அணிகலன்கள்
- ✘ ஒப்பனை அல்லது கிரீம்கள்
- ✘ நக பூச்சு
- ✘ மற்ற மதிப்புமிக்க பொருட்கள்
- ✘ பெரிய தொகைகள்.





இவற்றை உங்களுடன் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுங்கள்:

- ✔ உங்கள் கண்ணாடிகள், செயற்கைப் பற்கள், உதிரி பேட்டரிகள் கொண்ட செவிப்புலன் கருவிகள், இவற்றுக்கான பெட்டி பயனுள்ளதாக இருக்கும்
- ✔ உங்கள் சாதாரண மருந்துகள். நீங்கள் எதையாவது எடுப்பதை நிறுத்த வேண்டுமா என்று கூழு உங்களுக்குச் சொல்லும்
- ✔ அறுவை சிகிச்சையின் நாளில் செய்ய வேண்டிய ஒன்று, இசை (ஹெட்ஃபோன்கள், மற்ற நோயாளிகளுக்கு தொந்தரவு செய்யாதவாறு), படிக்க ஏதாவது அல்லது உங்களை ஆசுவாசப்படுத்தும் விளையாட்டுகள் போன்றவை
- ✔ குளிர்ச்சியாக இருக்கும் சந்தர்ப்பங்களில் அணிய சூடான மற்றும் வசதியான ஏதாவது, மற்றும் கழுவ வேண்டிய பொருட்கள்.

நீங்கள் சாப்பிடுவதை எப்போது நிறுத்த வேண்டும் என்று மருத்துவமனை உங்களுக்குச் சொல்லும்.

இனிப்புகள், சூயிங் கம் அல்லது பால் இல்லை என்று அர்த்தம். அறுவை சிகிச்சையின் போது உங்கள் வயிற்றில் உணவு இருந்தால், அது ஆபத்தானது.



சவிலியர் உங்களை நிறுத்தச் சொல்லும் வரை நீங்கள் தொடர்ந்து தண்ணீர் குடிக்க வேண்டும், இதனால் நீங்கள் எழுந்ததும் அதிக தாகத்தை உணர மாட்டீர்கள்.



மருத்துவமனை உங்களுக்கு மாற்றுவதற்கு ஒரு மருத்துவமனை கவுனையும் உங்கள் மணிக்கட்டில் உங்கள் பெயருடன் அணிய ஒரு பேண்டையும் கொடுக்கும்.

உங்கள் அறுவை சிகிச்சைக்கான நேரம் வரும்போது, ஒரு நர்ஸ் உங்களை ஆபரேஷன் தியேட்டருக்கு அழைத்துச் செல்வார்.

உங்கள் பராமரிப்பாளர் அல்லது செவிலியர் உங்களுடன் செல்ல அனுமதிக்கப்படலாம்.



கூழு இன்னும் சில சோதனைகளைச் செய்து, உங்கள் மணிக்கட்டு பட்டை உள்ள விவரங்களைப் பார்க்கும். எல்லாம் சரியாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்த அவர்கள் உங்களிடம் சில கேள்விகளைக் கேட்பார்கள், மேலும் நீங்கள் அறுவை சிகிச்சைக்கு ஒப்புக்கொள்கிறீர்களா. ஒப்புதல் படிவத்தில் கையெழுத்திடும்படி கேட்கப்படுவீர்கள்.



அறுவை சிகிச்சையின் போது உங்களுக்கு தேவையான அனைத்து மருந்துகளையும் கொடுப்பதற்காக மயக்க மருந்து நிபுணர் உங்கள் கையின் பின்புறத்தில் ஒரு சிறிய பிளாஸ்டிக் குழாயை (கனுலா) வைப்பார். சில நேரங்களில் உங்கள் மயக்க மருந்து நிபுணர் இதை மிகவும் வசதியாக மாற்ற ஒரு கிரீம் பயன்படுத்துவார்.

சில நரேங்களில் நீங்கள் தூங்குவதற்கு பதிலாக ஒரு வாயுவை சுவாசிக்கலாம்.

நீங்கள் தூங்கியவுடன், நீங்கள் எழுந்திருக்கும் வரை மயக்க மருந்து நிபுணர் உங்களுடன் இருப்பார்.

ஆபரேஷன் முடிந்து வீட்டிற்கு எப்படி செல்வது

அறுவை சிகிச்சைக்குப் பிறகு நீங்கள் முழுவதுமாக விழித்திருந்து சரியாகும் வரை தியேட்டருக்கு அருகிலுள்ள அறைக்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள். அங்கே செவிலியர்கள் உங்களுடன் இருப்பார்கள்.

அவர்கள் உங்களுக்கு வசதியாக இருக்க தேவைப்பட்டால் மருந்துகளையும் கொடுக்க முடியும்.

நீங்கள் நன்றாக குணமாகிவிட்டீர்கள் என்று அவர்கள் மகிழ்ச்சியடைந்தவுடன், அவர்கள் உங்களை வார்டுக்கு அழைத்துச் செல்வார்கள்.

வார்டில் நீங்கள் மீண்டும் குடிக்கவும் சாப்பிடவும் ஆரம்பிக்கலாம். இங்கே ஊழியர்கள் உங்களை மருத்துவமனையை விட்டு வெளியேறத் தயார்படுத்துவார்கள்.

நீங்கள் வீட்டில் என்ன வலிநிவாரணி மாத்திரைகள் எடுக்க வேண்டும் என்பது குறித்து ஊழியர்கள் உங்களிடம் மற்றும் உங்கள் பராமரிப்பாளர் உடன் பேசுவார்கள்.

எவ்வளவு, எத்தனை முறை எடுக்க வேண்டும் என்று சொல்வார்கள்.

நீங்கள் வீட்டிற்கு வந்ததும் ஏதேனும் பிரச்சனைகள் ஏற்பட்டால் யாரை அழைப்பது என்பது உங்களுக்கும் உங்கள் பராமரிப்பாளருக்கும் தெரியும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் மருத்துவமனையை விட்டு வெளியேறுவதற்கு முன், பணியாளர்கள் அழைப்பதற்கான எண்ணைக் கொடுப்பார்கள்.

உங்கள் பராமரிப்பாளருடன் நீங்கள் வீட்டிற்கு செல்ல வேண்டும். நீங்கள் வீடு திரும்பிய பிறகு முதல் நாள் இரவு முழுவதும் அவர்கள் உங்களுடன் இருக்க வேண்டும்.

அறுவை சிகிச்சைக்குப் பிறகு சில நாட்களுக்கு நிதானமாக எடுத்துக் கொள்ளுங்கள். மருத்துவமனை உங்களுக்கு வழங்கும் எந்த வழிமுறைகளையும் பயிற்சிகளையும் கவனமாகப் பின்பற்றவும்.

நீங்கள் மிகவும் உடல்நிலை சரியில்லாமல் அல்லது சூடாகவும் வியர்வையாகவும் உணர ஆரம்பித்தால், உங்கள் பராமரிப்பாளரிடம் மருத்துவமனைக்கு அழைக்க அல்லது உங்களை மீண்டும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும்படி கேளுங்கள்.

உங்கள் காயத்தைப் பற்றி ஏதேனும் கவலைகள் இருந்தால், உங்கள் பொது மருத்துவர் அல்லது மருத்துவமனையைத் தொடர்பு கொள்ளவும்.

நீங்கள் எப்போது மீண்டும் வாகனம் ஓட்டத் தொடங்கலாம் என்பது குறித்து உங்களுக்கு வழங்கப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றவும்.

உங்கள் அறுவை சிகிச்சைக்கு நல் வாழ்த்துக்கள்!

உங்களிடம் ஏதேனும் கேள்விகள் இருந்தால் அல்லது எதுவும் தெளிவாக இல்லை என்றால் ஊழியர்களிடம் கேட்க மறக்காதீர்கள். அவர்கள் உங்களுக்கு உதவ இருக்கிறார்கள்.

பொறுப்புத் துறப்பு

இந்த துண்டுப்பிரசுரத்தில் உள்ள தகவல்களை துல்லியமாகவும் புதுப்பித்ததாகவும் வைத்திருக்க நாங்கள் மிகவும் முயற்சி செய்கிறோம், ஆனால் இதற்கு நாங்கள் உத்தரவாதம் அளிக்க முடியாது. இந்தப் பொதுவானத் தகவல், உங்களுக்கு இருக்கக்கூடிய அனைத்து கேள்விகளையும் கொண்டுள்ளது அல்லது உங்களுக்கு முக்கியமானவையாக இருக்கக்கூடிய அனைத்தையும் கையாளும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இந்த துண்டுப்பிரசுரத்தை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்தி, உங்கள் தேவைகள், மற்றும் உங்களுக்குள்ள ஏதேனும் கவலைகள் பற்றி உங்கள் மருத்துவக் குழுவுடன் நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டும். இந்தத் துண்டுப் பிரசுரம் மட்டும் தனியாக ஒரு அறிவுரையாகக் கருதப்படக் கூடாது. இதை எந்த வணிக அல்லது தொழில் நோக்கத்திற்கும் பயன்படுத்துமுடியாது. முழுமையான பொறுப்புத் துறப்பிற்கு தயவுசெய்து இங்கே கிளிக் செய்க (rcoa.ac.uk/patient-information/translations/tamil)

அனைத்து மொழிபெயர்ப்புகளும் Translators without Borders சமுதாயத்தால் வழங்கப்படுகின்றன. மொழிப்பெயர்ப்பை முடிந்தவரை துல்லியமாக இருக்க, மொழிப்பெயர்ப்பின் தரம் சரிபார்க்கப்படுகிறது, ஆனால், சில தகவல்களில் தவறுகள் மற்றும் தவறான விளக்கம் ஏற்படும் ஆபத்து உள்ளது.

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை எங்களுக்குச் சொல்லுங்கள்

இந்தச் சிற்றேட்டை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை நாங்கள் வரவேற்கிறோம். உங்களிடம் ஏதேனும் பொதுவான கருத்துகள் இருந்தால், அவர்களுக்கு மின்னஞ்சல் அனுப்பவும்:

patientinformation@rcoa.ac.uk

020 7092 1500

ராயல் காலஜே ஆஃப் அனஸ்தெடிஸ்ட்ஸ்
சர்ச்சில் ஹவுஸ், 35 ரெட் லயன் ஸ்கொயர், லண்டன் WC1R 4SG

rcoa.ac.uk

இரண்டாவது பதிப்பு, மார்ச் 2022

இந்தச் சிற்றேடு வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குள் மறு ஆய்வு செய்யப்படும்.

2022 ராயல் காலஜே ஆஃப் அனஸ்தீட்டிஸ்ட் ©

நோயாளித் தகவல் வளங்களை உருவாக்கும் நோக்கத்துக்காக இந்தச் சிற்றேட்டைப் பிரதியெடுத்துக் கொள்ளலாம். இந்த அசல் மூலத்தை தயவுசெய்து மேற்கோள் காட்டுங்கள். இந்தச் சிற்றேட்டின் ஒரு பகுதியை நீங்கள் இன்னொரு வெளியீட்டில் பயன்படுத்த விரும்பினால், பொருந்தும் ஒப்புகை வழங்கப்படவேண்டும், வணிகச் சின்னங்கள், பிராண்டிங், படங்கள் மற்றும் சிறுபடங்கள் நீக்கப்படவேண்டும். மேலும் தகவல்களுக்கு, எங்களைத் தொடர்புகொள்ளவும்.

இந்த துண்டுப்பிரசுரம் CHANGE People ஆல் மதிப்பாய்வு செய்யப்பட்டது

changepeople.org